1973 டிசம்பர் 3]

(*a*) whether the Government have proposed to increase the existing grant of 15 paise for the Midday Meals Scheme in the schools run by the Harijan Welfare Department; and

(*b*) if so, the date from which such increased grant will be given?

அரிசன நலத்துறை நடத்தும் பள்ளிகளில் வழங்கும் மதிய உணவுத் திட்டம்.

திரு. என். வில்சன் அப்பலோஸ் (திரு. எல். பலராமன் சார்பில்) : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரிசன நலத்துறை நடத்தும் பள்ளிகளில் வழங்கும் மத்திய உணவிற்குத் தற்போது 15 பைசா வீதம் வழங்கும் அரசு மானியத்தை உயர்த்த அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆமெனில், எப்போது முதல் வழங்க உத்தேசம்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Construction of a multi-storeyed building at the Government Estate, Madras.

* 183. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to the answer given to Legislative Council Starred Question No. 60 on the Floor of the Council on 18th August 1972—

(*a*) whether the Government have arrived at any decision over the proposal of constructing a multi-storeyed building at the Government Estate, Mount Road, Madras; and

(*b*) if so, the details thereof?

சென்னை அரசாங்க மாளிகையில் பலமாடிக் கட்டிடம் கட்டுதல்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 18-8-1972-ல் சட்ட மன்ற மேலவை உடுக்குறியிட்ட வினு எண் 60-க்கு அளிக்கப்பட்ட விடையினை யொட்டி, கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை அண்ணாசாலை அரசாங்க மாளிகையில் பலமாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்டும் செயற்குறிப்பு குறித்து அரசு முடிவு எதும் எடுத்துள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, பலமாடிக் கட்டிடம் எதற்காகக் கட்டப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அரசாங்க அலுவலகங்கள் வைப்பதற்காகக் கட்டப்படுகிறது.

Vedaranyam Salt Industry in Thanjavur District.

*184. *Q.*—Thiru V. ISVARMURTI (on behalf of Thiru S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) Whether the Government are aware of the accumulation of stocks at the Vedaranyam Salt Industry in Thanjavur District in January 1973 ; and

(*b*) if so, the action taken thereon?

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள வேதாரண்யம் உப்புத் தொழிற்சாலை.

திரு வ. ஈஸ்வரமூர்த்தி (திரு எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973–ஆம் ஆண்டு ஜனவரி திங்களில், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள வேதாரண்யம் உப்புத் தொழிற்சாலையில் இருப்பு சேர்ந்து வந்ததைப் பற்றி அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) மண்டல திட்டத்தின்கீழ், போதுமான இரயில்வே வாகன்களைப் (Wagons) பெறுவதில் உப்பு உற்பத்தியாளர்களுக்கு உப்புத்துறை உதவி செய்து வருகிறது. வாகன்களை வழங்கும் நிலைமை கணிசமான அளவுக்குச் சீராகியுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS